பிரஸார் பாரதி
<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

25 11 2022 12 40
வெள்ளிக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அஸ்ஸாமின் போர்படை தளபதி **Lachit Borphukan-**னின் 400-வது பிறந்த தின கொண்டாட்டங்களின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.

2. சுற்றுச்சூழல் மேம்பாடு, பருவநிலை மாற்றம் போன்ற சவால்களை எதிர்கொள்வதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக்கொள்கை உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. குஜராத் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியுசிலாந்து வெற்றிபெற 307 ரன் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ----

[]<<<>>>[]

அஸ்ஸாமின் போர்படை தளபதி **Lachit Borphukan-**னின் 400-வது பிறந்த தின கொண்டாட்டங்களின் நிறைவு நாளான இன்று பிரதமர் திரு நரேந்திரமோடி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த மூன்று நாள் விழாவில் அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த அமைப்புகளின் கண்காட்சி நடைபெற்றது.

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றனர்.

அஸ்ஸாம் மாநிலத்தின் கலாச்சார கலை நிகழ்ச்சிகளும் இந்த விழாவில் நடைபெற்றது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், போரில் **Lachit Borphukon** -னின் பங்கு பாராட்டுக்குரியது என்றும், துணிச்சலுடன் செயலாற்றிய அவரது வீரம் மக்களால் என்றும் நினைவு கூறப்படும் என்றும் கூறியுள்ளார்.

அறியப் படாத சுதந்திரப் போராட்ட வீரர்களை நாட்டு மக்கள் என்றும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கூறியுள்ளார்.

1671-ஆம் ஆண்டு மொகலாய அரசர் ஔரங்கசிப்புக்கு எதிராக படைதிரண்டு சராகத் போரில் வெற்றி கண்டது இன்றும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது நினைவாக அஸ்ஸாம் மாநில முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க மாநிலம் முழுவதும் நேற்று இரவு தீபங்கள் ஏற்றப்பட்டன.

**[]<<<>>>[]**

மலேசியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள திரு அன்வர் இப்ராஹிம்-க்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டள்ள டுவிட்டர் பதிவில், இந்தியாவும் - மலேசியாவும் பாதுகாப்பு வியூக பங்காளர்களாக இருப்பதாகவும், இந்த உறவை மேலும் வலுப்படுத்த விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

1990-ஆம் ஆண்டுகளில் துணை பிரதமராக பணியாற்றிய திரு அன்வர் இப்ராஹிம், நேற்று அந்நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சுற்றுச்சூழல் மேம்பாடு, பருவநிலை மாற்றம், கோவிட் தொற்று போன்ற சவால்களை எதிர்கொள்வதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

போர் மற்றும் நாடுகளுக்கு உள்ளே எழும் சர்ச்சைகள் காரணமாக சவாலான சூழல்கள் அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

புதுதில்லியில் இன்று தொடங்கிய இந்திய பசிபிக் மண்டல மாநாட்டில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடி பாலியில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் இதனை எடுத்துரைத்ததாகக் கூறினார்.

ஆசிய மண்டலம் முழுவதிலும் கூட்டமைப்பாக நாடுகள் செயல்பட வேண்டுமென்றும், பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

கூட்டமைப்பை வலுப்படுத்தினால் மட்டுமே அமைதியான சூழல் நிலவும் வாய்ப்பு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி, வர்த்தக பரிமாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும் என்று திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

**[]<<<>>>[]**

அடுத்த மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்கு குடியரசுத் தலைவர் மாளிகை மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்படும்.

இதனை காண விரும்புவோர் **'rashtrapatisachivalaya.gov.in/rbtour'** என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

காலை பத்து மணி முதல் மாலை நான்கு மணி வரை குழுக்களாக பார்வையாளர்கள் சென்ற பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குடியரசுத் தலைவர் மாளிகையின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

**[]<<<>>>[]**

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தங்கர், யுனஸ்கோ - இந்தியா – ஆப்ரிக்கா ஹக்கத்தான் போட்டியின் நிறைவு விழாவில் பங்கேற்கிறார்.

உத்திரபிரதேச மாநிலம் கவுதம புத்தா பல்கலைக்கழகத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

22-ஆம் தேதி தொடங்கிய இந்த போட்டி 36 மணி நேரம் தடையின்றி நடைபெற்றது.

இந்த கூட்டமைப்பில் உள்ள நாடுகளில் நிலவும் சமுதாய சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு தொழில்நுட்பம் மூலம் தீர்வு காண்பதற்கு ஏதுவாக இளைய படைப்பாளர்கள் இந்த போட்டிகளில் கலந்து கொண்டனர்.

புத்தொழில் தொடங்கும் திறன் படைத்த இளைஞர்கள் இதில் பங்கேற்றதாகவும், வல்லுநர்களின் ஆலோசனையின்பேரில் போட்டிகள் நடைபெற்றதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

குஜராத் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அங்கு பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

இன்று அம்மாநிலத்தில் நான்கு இடங்களில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டங்களில் பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா பங்கேற்கிறார்.

மத்திய அமைச்சர்கள் திருமதி ஸ்மிருதி இரானி, திரு தர்மேந்திர பிரதான் மற்றும் திரு புருஷோத்தம் ரூபாலா ஆகியோரும் தேர்தல் கூட்டங்களில் உரையாற்ற உள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் திரு ராஜீவ்சுக்லா மற்றும் திரு அலோக் சர்மா ஆகியோர் இன்று அகமதாபாத்தில் பிரச்சாத்தில் ஈடுபடுகின்றனர்.

ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவரும், பஞ்சாப் முதலமைச்சருமான திரு பகவந்த் மன், பல்வேறு இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக்கொள்கை உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற புதிய தொழில்நுட்ப ஜவுளிப் பொருட்களுக்கான மாநாட்டில் பேசிய அவர், நவீன தொழில்நுட்ப ஜவுளி நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்யும் என்று குறிப்பிட்டார்.

*( சவுண்ட்பைட் - ஸ்டாலின் ) -35-- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழக அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் 200 பேர் காசிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதிலும் இதற்கான முன்னேற்பாடுகள் நடைபெறும் என்று கூறினார்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் மீட்கப்படும் என்றும் திரு சேகர்பாபு தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - சேகர்பாபு ) -25-- செகண்ட்*

**[]<<<>>>[]**

கோவாவில் நடைபெற்று வரும் இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட 'திரைப்படத்துறையின் நாளைய படைப்பாளர்கள்' தொடர்பான குறும்படங்களுக்கான போட்டி நேற்று நிறைவுபெற்றது.

நாட்டின் அனைத்து பகுதிகளிலிலுமிருந்து 53 மணி நேரத்திற்குள் குறும்படங்களை தயாரித்து அனுப்பும் போட்டி கடந்த 21-ஆம் தேதி தொடங்கியது.

53 மணி நேரத்தில் தயாரிக்கப்பட்ட ஐந்து குறும்படங்கள் தேர்வு செய்யப்பட்டன.

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகமும், ஸ்டார்ட்ஸ் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடத்திய இந்த போட்டிகளில் பெண்கள் பாதுகாப்பு குறித்த திரைப்படம் பரிசு பெற்றது.

இந்த திரைப்படங்கள் அனைத்தும் ஸ்டார்ட்ஸ் தொலைக்காட்சியில் வரும் ஞாயிற்றுகிழமை இரவு ஒன்பது மணிக்கு திரையிடப்படும்.

[]<<<>>>[]

பெண்கள் மீதான வன்முறை ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

உலகம் முழுவதிலும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்த நாடுகளில், இந்நாளையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறையை கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்தி 1979-ஆம் ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த தினத்தை அறிவித்தது.

இன்னும் 37 நாடுகளில் பெண்கள் மீதான வன்முறை குறித்த எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

49 நாடுகளில் குடும்ப வன்முறைக்கு எதிராக பெண்களை பாதுகாப்பதற்கு எந்த சட்டமும் இயற்றப்படவில்லை.

[]<<<>>>[]

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் அடுத்த ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

டேட்டா சையன்ஸ் படிப்பு மற்றும் அதன் தொடர்புடைய படிப்புகளில் இளங்கலை பட்டம் பயில விரும்புவோர் அடுத்த ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலும் விவரங்களை **https;//onlinedegree.iitm.ac.in-** என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்று அந்த நிறுவனத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ராஜஸ்தான் மாநிலம் பில்வாராவில் ஏற்பட்ட கலவரத்தின்போது காவல்துறையினர் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டதாக காவல்துறையின் கூடுதல் தலைமை இயக்குநர் திரு அவாசிங் குமாரியா தெரிவித்துள்ளார்.

கோட்வாலி காவல் நிலையம் அருகே நிகழ்ந்த துப்பாக்கி சூட்டின்போது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் காயமடைந்ததாகவும் அவர் கூறினார்.

மாவட்டம் முழுவதும் இன்டர்நெட் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியுசிலாந்து வெற்றிபெற 307 ரன் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆக்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற நியுசிலாந்து அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதையடுத்து முதலில் களமிறங்கிய இந்தியா ஏழு விக்கெட் இழப்புக்கு 306 ரன் எடுத்தது.

தற்போது ஆடி வரும் நியுசிலாந்து சற்று முன் வரை -20- ஓவரில் -3- விக்கெட் இழப்புக்கு -88- ரன் எடுத்துள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

***End of News***